// Signed COPY //

**கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : டாக்டர். அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப.,**

ந.க.எண்.1803/2022/பேரூ2. நாள்.11 .07.2023

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிருவாகம் – கடலூர் மண்டலம் – கடலூர் மாவட்டம் – கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரிந்த பணியாளர்களை 20% ஒதுக்கீடு அடிப்படையில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகிய பணியிடங்களில் பணியமர்த்தப்பட்டது – இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் நிலையில் பணியில் இணைந்தது - பணியில் இணைந்த நாளினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.233, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.07.07.2020.
2) கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 598 / 2017 / பேரூ2, நாள். 31.07.2020
3) பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண். 73/ 2022/ அ1 நாள். 31.05.2022 மற்றும் 20.06.2023
4) மங்கலம்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண்.70 /2022/ அ1 நாள். 20.06.2023
5) லால்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண்.73/ 2022/அ1 நாள். 28.06.2023
6) பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண்.73/ 2022/அ1 நாள். 20.06.2023
7) குறிஞ்சிப்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க.எண்.801 /2020/அ1 நாள். 28.06.2023.

*****

**ஆணை :**

கடலூர் மண்டலம், கடலூர் மாவட்டப் பேரூராட்சிகளில் கீழ்நிலைப் பணியிடங்களில் பணிபுரிந்து வந்த பணியாளர்களில் 20% ஒதுக்கீட்டின்

அடிப்படையில் பார்வை 1-இல் கண்டுள்ள அரசாணையில், இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நேரடி நியமனமாக பணியமர்த்தி பதவி உயர்வு அளித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

அதனடிப்படையில், பார்வை 2-இல் கண்டுள்ள கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையில், கீழ்குறிப்பிட்டுள்ள பணியாளர்களை இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்களாக பணி நியமனம் செய்தும் மற்றும் பணியில் இணைந்து கொள்ள அனுமதித்தும் ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, மேற்படி பணியாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பேரூராட்சிகளில் பணியில் இணைந்து கொண்டு தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ. எண். | பணியாளர் பெயர், பதவி மற்றும் தற்போது பணிபுரிந்து வரும் பேரூராட்சி (திருவாளர்கள்) | பணியில் இணைந்த நாள் | பணி வரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | தா.ரமேஷ், இளநிலை உதவியாளர், பெண்ணாடம் | 05.08.2020 பிற்பகல் | 05.08.2020 பிற்பகல் |
| 2 | எஸ்.துரைரங்க ராமானுஜம், இளநிலை உதவியாளர், மங்கலம்பேட்டை | 05.08.2020 பிற்பகல் | 05.08.2020 பிற்பகல் |
| 3 | எஸ்.ராசு, வரித்தண்டலர், லால்பேட்டை | 04.08.2020 பிற்பகல் | 04.08.2020 பிற்பகல் |
| 4 | ரா.ஆனந்தன், வரித்தண்டலர், பெண்ணாடம் | 05.08.2020 முற்பகல் | 05.08.2020 முற்பகல் |
| 5 | பே.சேரன், வரித்தண்டலர், குறிஞ்சிப்பாடி | 05.08.2020 முற்பகல் | 05.08.2020 முற்பகல் |

எனவே, மேற்படி பேரூராட்சிகளில் பணியில் இணைந்து கொண்டு பணிபுரிந்து வரும் அட்டவணையில் கண்டுள்ள இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர்கள் பணியில் இணைந்த கலம் எண். 4–இல் கண்டுள்ளவாறு வரன்முறை செய்து (Service Regularisation) இதன்வழி ஆணையிடப்படுகிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர் மாவட்டம்.

பெறுநர்
தொடர்புடைய பேரூராட்சி பணியாளர்கள்,
கடலூர் மாவட்டம்.

6/7/2023

<u>நகல்</u>

1. பேரூராட்சிகளின் இயக்குநர், நகர் நிர்வாக அலுவலக வளாகம், 7 மற்றும் 8வது தளம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 28 தகவலுக்காக அனுப்பிவைக்கப்படுகிறது.
2. செயல் அலுவலர், பெண்ணாடம், மங்கலம்பேட்டை, லால்பேட்டை மற்றும் குறிஞ்சிப்பாடி பேரூராட்சிகள், கடலூர் மாவட்டம்.